நல்லூர் கிளை நூலகம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு | விலை ரூபா; 5-00

முரசு 05 ஒலி 231 ஆங்கீரச ஆனி 31 ( 15. 07 1992 ) புதன்


## யாழ் பயணிகள் வசதிக்கு கப்பல் போக்குவரத்து?

யாழ் மாவட்டத்தில் இருந்து அவசிய தேவைகளுக்காக கொழும்பு செல்லும் பயணிகள் அரச அதிகாரிகள் நன்மை கருதி கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு விசேட கப்பல் சேவை ஒன்றை நடத்தும்படி கொழும்பில் சம்பந்தப்பட்டவர்களிடம் தாம் கேட்டுள்ளதாக அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். மன்னார்தீவு மக்களின் கொழும்பு போக்குவரத்துக்காக கப்பல் சேவை நடத்தப்படுவது போல இதனையும் நடத்தலாம் எனவும் அரச அதிபர் தெரிவித்தார். 06

# ஆனையிறவின் தென்பகுதி நோக்கி இராணுவ நடவடிக்கை முஸ்தீபு!

## கொம்படி, ஊரியான் வழியாகவும் பரந்தன் நோக்கி வரத் திட்டம்

ஆனையிறவுக்கு தெற்கு பக்கமாக பரந்தன் நோக்கி மீண்டும் ஓர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனையிறவு தெற்கு புறமான இராணுவ நடவடிக்கையும் நிறைவேறிய பின்னரே பல வேகய - 2 நடவடிக்கை முற்றுப்பெற்றதாக கருதமுடியும் என கூட்டுப்படை தலைமையக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்

இந்த இராணுவ நடவடிக்கையின் போது ஆனையிறவு முகாமிலிருந்தும் ஊரியான் கொம்படி பாதை வழியாக கடனீரேரியை ஊடறுத்து தெற்காக இரு முனைகளில் பரந்தன் பக்கமாக படையினர் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு தெற்கு பகுதியை நோக்கிய இராணுவ நடவடிக்கை மூலம் ஆனையிறவு முகாம் ஊடான வீதியை திறக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்த கூட்டுப்படை தலைமையக அதிகாரி தெரிவித்தார்.

### கூட்டுப்படை தலைமையகம் அறிவிப்பு

## பரந்தன் - முல்லை வீதி தடைசெய்யப்பட்ட வலயம்

பரந்தன் - முல்லைத்தீவு வீதியின் இரு மருங்கிலிருந்தும் ஆயிரம் மீற்றருக்கு அப்பால் பொதுமக்களை இன்று முதல் அகன்று செல்லுமாறு கூட்டுப்படை தலைமையகம் நேற்று தெரிவித்தது.

எனினும் இந்த பிரதான வீதியில் உள்ள தர்மபுர மகா வித்தியாலயத்திலும், கிளைமறு பால் சேகரிப்பு நிலையத்திலும் பொதுமக்கள் சென்று தஞ்சமடையலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## பரந்தன் பகுதியில் ஊரடங்கு அமுல்

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவிலும் மற்றும் பரந்தன் தருமபுரம், புதுக்குடியிருப்பு, விசுவமடு நகர்களில் நேற்று மாலை 6 மணிமுதல் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது என கூட்டுப்படைத்தலைமையகம் அறிவித்தது

கிளிநொச்சி யாழ் மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டு இருந்த ஊரடங்கு நேற்று முன்தினம் தான் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## யாழ். கடனீரேரியில் நடமாட தடையாம்

யாழ் கடனீரேரி பகுதி பொதுமக்கள் நடமாட்டத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று குறிப்பிட்டது.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, ஆனையிறவு மேற்கு, நாகர்கோவில் உள்ளிட்ட எல்லையாக கொண்ட இந்த யாழ் கடனீரேரியில் நடமாட்டம் தடைசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## தூக்கா ஆலய சேதவிவரம் அரச அதிபர் எடுத்துச்சென்றார்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீதான விமானத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட விபரங்கள் சேதமான பகுதி புகைப்படங்கள் என்பவற்றை யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கொழும்புக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

இதேபோல மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்குள் உள்ள முக்கிய பொருள்கள் தொடர்பான படங்களையும் அரச அதிபர் எடுத்துச் சென்றுள்ளார்.

மாவிட்டபுரத்தில் படையினர் இருப்பதால் இப்பொருள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## குமண கப்பலில் மா வரும்

திருகோணமலைக்கு நேற்று சென்றுள்ள குமண கப்பல் அங்கு பிறிமா ஆலையில் இருந்து சோதுமை மாவை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு வரும் என செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். 47

## லெப். சீலன் நினைவுக்கூட்டம்

மாவீரர் லெப்டினன்ட் சீலன் (லூர்க்கசி சாள்ஸ் அன்ரனி, திருமலை) 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று இரவு 7. 30 மணியளவில் மீசாலை - அல்லாரை தெற்கில் அமைக்கப்பட்டுள்ள சீலன் நினைவுத் தூபிக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

## வழமைபோல வங்கிகள் இயங்கும்

ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதை தொடர்ந்து யாழ் நகரில் உள்ள வங்கிகள் இன்று வழமை போல் திறந்திருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. 47

## இயக்கச்சியில் தற்போது முகாம் அமைக்கவில்லையாம்

இயக்கச்சிப் பகுதியில் தற்போதைக்கு இராணுவ முகாம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு வரையிலான 8 கிலோ மீற்றர் தூரத்தில் 50 காவலரண்கள் அமைக்க படையினர் திட்டமிட்டுள்ளதாகவும் இக் காவலரண்கள் பலப்படுத்தப்பட்ட பின்னரே இயக்கச்சியில் முகாம் அமைக்க முடியும் எனவும் அந்த இராணுவ அதிகாரி குறிப்பிட்டார்.

செம்பியன்பற்று குளம் கட்டுப்பொத்த முகாம் தளர்க்கப்பட்டமை படையினரின் புதிய அறிவிப்புகளுக்கு காரணமாக இருக்கலாம் என கூறப்படுகிறது.

## பலாலி முகாமில் இருந்து நால்வர் நேற்று விடுவிப்பு

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் நான்கு பேர் நேற்று இராணுவத்தால் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நான்கு பேரும் பலாலி சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர்.

இந்த நால்வரில் இருவர் வடமராட்சி கடலில் வைத்து கைது செய்யப்பட்ட மீனவர்கள் என்றும் மற்றைய இருவயோதிபர்களும் வலிவடக்கு இராணுவ நடவடிக்கையின் போது கருகம்பனையில் இராணுவத்திடம் அகப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இவர்கள் தமது இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (47)

## சென். பற்றிக்ஸ் மாணவர் இரத்ததானம் செய்தனர்

சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் பலர் நேற்று முன்தினம்யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்த தானம் செய்தனர்

இரத்ததானம் செய்யமுன் வந்த கல்லூரி உயர்தர மாணவர்கள் 60 பேரில் 12 பேரில் மட்டுமே இரத்தம் பெறப்பட்டது.

மிகுதி மாணவர்களுடைய நிறையும் வயதும் குறைவாக இருந்தமையினால் அவர்களிடமிருந்து இரத்தம் பெறப்படவில்லை என இரத்த வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன அவர்கள் முன் வந்ததை யிட்டு இரத்த வங்கியினர் பாராட்டு தெரிவித்தனர். 07

## ★ காங்கிரஸ் உறுப்பினர் அ. தி. மு. க. வெற்றிக்கு ராஜீவ்கொலையே காரணம்

கடந்த தேர்தலில் அ. தி. மு. க. பெருவெற்றி பெற்றதற்கு பிரதான காரணம் என்பது குறித்து அ. தி. மு. க விற்கும் இந்திரா காங்கிரஸிற்கும் இடையிலான மோதல் சூடு பிடித்துவருகிறது.

நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினரும் தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவருமான எஸ் ஆர். பாலசுப்பிரமணியன்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ● கொழும்புப்பத்திரிகைகள் யுத்த செய்திகள் வெளியிடுவதில் ஒத்துழைக்க கோரிக்கை

பத்திரிகையாளர்கள் வடக்கு - கிழக்கு யுத்தம் பற்றிய செய்திகளை வெளியிடும் போது தம்முடன் ஒத்துழைக்கவேண்டும்மென கூட்டுப்படைத்தலைமையகத் தளபதி ஜெனரல் கமிலடன் வணசிங்கவும் ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனும் கோரிக்கை விடுத்துள்ளனர்

கடந்த வாரம் பத்திரிகையாளர்களைச் சந்தித்த இவ் இருவரும் இவ் வேண்டுகோளை விடுத்தனர்,

அரச சார்பாக செய்தி வெளியிடுவதே இந்த 'ஒத்துழைப்பு' எனக்கருதப்படுகிறது

# சென்றலைட்ஸ் வி.கழகம் வங்கி அணியை வென்றது

சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், யாழ். வர்த்தக வங்கி அணிக்கும் இடையில் நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற சினேகபூர்வ மட்டுப்படுத்தப்பட்ட பந்து மாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில், சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

விபரம் வருமாறு - சென்றலைற் அணி 12 பந்து மாற்றங்களில் 5 இலக்குகள் இழப்பிற்கு 42 ஓட்டங்கள், வர்த்தக வங்கி அணி 11 பந்து மாற்றங்களில் சகல இலக்குகள் இழப்பிற்கு 40 ஓட்டங்கள் மாத்திரம். 16

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சை

இளைப்பாறியுள்ளவர்களை பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கும் நேர்முகப் பரீட்சைகளை கோட்டரீதியாக நடத்த யாழ். பிராந்தியக் கல்விப் பணிமனை நடவடிக்கை எடுத்துள்ளது.

வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்படுபவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 20-07-92 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல. 57 கோவில் வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் வேலணைக் கோட்டக்கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

# கொக்குவில் அணியை பற்றிக்ஸ் அணி தோற்கடித்தது

யாழ். கிரிக்கெட் சபையினால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதிற்கு உட்பட்டவர்கள் கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி அதனை எதிர்த்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரியை 4 ஓட்டங்களால் தோற்கடித்து இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணி சகல இலக்குகளையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொக்குவில் அணி சகல இலக்குகளையும் இழந்து 124 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதினால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. 16

# கடவுச்சீட்டு கட்டுப்பாடு இலங்கை தூதரகங்களில் தளர்வு

இலங்கைத் தூதரகங்களில் கடவுச்சீட்டுகளை பெறுவதில் உள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் தமது பயண ஆவணப் பத்திரங்களை எதுவித தாமதமுமின்றி அவர்கள் வாழும் நாட்டிலேயே இப்போது பெற்றுக்கொள்ள முடியும் என்று குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 10 இலட்சம் இலங்கையர் தற்போது வெளிநாடுகளில் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிற.

# இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் தனியார் வங்கி போல் செயற்படும்

இலங்கை மத்திய வங்கி அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ற கட்டமைப்பைக் கொண்டிருக்கிறதா என்பதை தாம் விமர்சன நோக்கில் ஆராய்ந்து வருவதாக புதிதாக மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள எச் பி திசநாயக தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் தனியார் மயப்படுத்தப்படமாட்டா. ஆனால் அவை தனியார் வங்கிகள் போல செயற்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் திரு. திசாநாயக கூறினார்.

# ஆசிரியர் சம்மதக் கடிதம் அனுப்பப் பணிப்பு

வட கிழக்கு மாகாண பொதுச் சேவையில் சேர்க்கும் நோக்குடன் வட கிழக்கு மாகாணத்திற்கு அப்பால் இருந்து வட கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடமாற்றப்பட்டு வந்துள்ள ஆசிரியர்களின் சம்மதக் கடிதங்களை உடன் அனுப்பி வைக்குமாறு வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

மேலும் இதுவரை இடமாற்றம் பெற்று கடமையேற்ற கடிதங்களை அனுப்பியுள்ள ஆசிரியர்களுடைய மாகாண சேவைக்கு சேர்வதற்கான கடிதங்களையும் அனுப்பி வைக்குமாறும் அவர் கோரியுள்ளார். 12

# இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிடின் வரிகள் அதிகரிக்கும்

இனப்பிரச்சினை நெருக்கடிக்கு ஒரு தீர்வு காணப்படாவிட்டால் பாதுகாப்பு வரி மூன்று வீதத்தில் நிற்காது. அது மூன்நூறு வீதமாக உயரும்.

இவ்வாறு பாதுகாப்பு வரி விதிப்பு சட்ட விவாதத்தில் பேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஸ்ரப் கூறினார். அவர் மேலும் பேசுகையில் அரசியல் தீர்வுக்கு ஆலோசனைகள் முன் வைக்கப்படும்போது அரசியல் கட்சிகள் அவற்றை யானையை பார்க்கச் சென்ற ஏழு குருடர்கள் போல் வைதிகின்றனர்.

சிலர் வடக்கு கிழக்கும் நிபந்தனையின்றி இணைக்கப்பட வேண்டுமென்கிறனர். வேறு சிலர் அப்படிச் செய்ய முடியாது என்கின்றனர்.

இந்த இரண்டு அணுகு முறைகளுமே தவறானவை என்றும் திரு. அஸ்ரப் கூறினார்.

★ தலைவர் பிரபாகரனை

# நாடுகடத்த ஒப்புக்கொள்வது அரசியல் தற்கொலை - மோதிலால்

சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை திரு. பிரபாகரனை நாடு கடத்த ஒப்புக்கொள்வதே அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது பிரபாகரன் இலங்கைப் பிரஜை. அவரை அரசியல் ரீதியாகவே அணுக வேண்டும். அல்லது சமாதானம் ஏற்படாது.

இவ்வாறு சட்டத்தரணி மோதிலால் நேரு சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் செய்கிறது. அநேகமான தமிழ்ப் பகுதிகளை விடுதலைப்புலிகள் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர். இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தாலும் கூட அரசியல் தீர்வுக்காண்பதற்கு அவர்களுடனேயே பேசவேண்டும்.

சில காலத்துக்கு முன் இலங்கைப் பிரஜைகளான பிரபாகரனையும், உமா மகேஸ்வரனையும் தமது சொந்த நாட்டுக்கே திருப்பியனுப்பும்படி இலங்கை கோரிய போது இந்தியா மறுத்து விட்டது.

"ஒரு இலங்கையரை இரசிய விசாரணை செய்வதற்கு இந்தியா எப்படிக் கோர முடியும்?"

'திரு.பிரபாகரன் பிடிக்கப்பட்டு இந்தியாவிடம் கையளிக்கப்பட்டால் அரசியல் தீர்வுக்கான கதவுகளை அது மூடிவிடும். ஏனெனில் அவரது இடத்திற்கு விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை இன்னுமொரு பிரபாகரன் ஏற்றுக்கொள்வார்.'

இவ்வாறு மோதிலால் நேரு தமது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# ஐ. நா. பாதுகாப்புச்சபை இன்று கூடுகின்றது

நியூயோர்க்கில் இன்று தென்னாபிரிக்க விவகாரம் குறித்து விவாதிக்க ஐ நா பாதுகாப்புச்சபை கூடவுள்ளது.

கறுப்பினத்தவர் மீதான வன்முறை நீடிப்பதாகவும் மேலும் சிலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான பேச்சுவார்த்தைகளை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா நிராகரித்துள்ளது தெரிந்ததே.

# குழுதவல்லிக்கு அழைப்பாணை

ராஜீவ் காந்தி கொலைச் சதி" தொடர்பாக நியமிக்கப்பட்ட நீதிபதி ஜெயின் குழு தமிழ் நாடு எம் ஜி ஆர் மாவட்டத்தைச் சேர்ந்த குமுதவல்லிக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

காங்கிரஸ் கட்சி எம். பி. மரகதம் சந்திரசேகரனின் மகள் லதா பிரியகுமார் கொலையாளிகள் எனச் சந்தேகிக்கப்பட்டோருடன் நட்புறவு கொண்டிருந்தார் என பரபரப்பான சத்தியக் கடதாசி ஒன்றை வர்மா கமிஷன் முன் குமுதவல்லி சமர்ப்பித்திருந்ததைத் தொடர்ந்தே இவ்வழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

# 'அண்ணாமலையு'ம் ரஜனி ரசிகரும்

"அண்ணாமலை' என்ற படவிழாவுக்கு நடிகர் ரஜனிகாந்த் தனது மனைவியுடன் வந்த போது அவரது ரசிகர்கள் பத்தாயிரம் பேர் 'அண்ணாமலை' பெயர் பொறிக்கப்பட்ட டி சேட்டுகளுடன் அவர்களை வரவேற்க வந்ததாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது ரஜனிகாந்துக்கே தமிழகத்தில் மிகக் கூடுதலான ரசிகர் மன்றங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## சிறுவிளம்பரம்

புலமைப்பரிசில் பரீட்சை

1992 (வி) உப்படடந்த கால வினாவிடை விற்பனையாகிறது. O/L. A/L கடந்த கால வினா விடை விற்பனையாகிறது அறிவகம், 374 மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம் 07038

சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் நீங்க, தீராத நோய், கஷ்டம், குடும்பப் பிரச்சினைகள் தீர அதிர்ஷ்டம் அழைக்கிறது. வலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம் ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம். (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர் 07027

# சேவைக்கால ஆசிரியர்கள் பொறுப்புகள் வரையறை!

சேவைக்கால ஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களின் பொறுப்புக்களையும் அவர்களுக்குரிய கடமைகளையும் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு வரையறுத்துள்ளது.

இதன்படி மாகாண கல்வி அமைச்சினாலும் தேசியக்கல்வி நிறுவனத்தினாலும் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் திருத்தங்கள் முதலியவற்றையும், கோட்டத்திலுள்ள பாட ஆசிரியர்களின் பாட அறிவையும், தொழில் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் பொறுப்புடையவர்கள் என இவர்களது பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

கோட்டத்திலுள்ள பாட ஆசிரியர்களின் பாட அறிவை விருத்தி செய்வதற்காக மேலதிக வகுப்புகளையும் தேவையான உசாத்துணை நூல்களையும் பெற்றுக் கொடுத்தல் பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத்தில் பிராந்திய மட்டத்தில் இடம்பெறும் பல்வேறு பரீட்சைகளுக்கு வேண்டிய மதிப்பீட்டு வினாக்களைத் தயாரிப்பதில் பாடசாலைகளுக்கு உதவுதல் என்பன போன்றவை இவர்களது கடமைகள் ஆகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கோட்ட, மாவட்ட மட்டத்தில் இயங்கும் சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர்கள் அனைவரும் வாரத்தில் ஐந்து நாட்களுக்குப் பூரணமாகப் பாடசாலையில் இருந்து விடுவிக்கப்படுவார்கள். இவர்களுக்குரிய மாதாந்த ஆகக்கூடிய விசேட கொடுப்பனவாக 500 ரூபா வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 12

# போலிக் கடவுச் சீட்டுடன் இலங்கையர் எகிப்தில் கைது

போலிக் கடவுச் சீட்டுடன் இலங்கையர் ஒருவர் எகிப்திய தலைநகர் கெய்ரோவில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, கனடா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கான போலிக் கடவுச்சீட்டுகள், விசாக்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் கும்பல் ஒன்றைச் சேர்ந்த இரு எகிப்தியர்களும் இலங்கையர் ஒருவரும் கடந்த திங்கட்கிழமை கெய்ரோவில் கைது செய்யப்பட்டதாக விமான நிலையப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

● கல்முனைப் பாடசாலைகளுக்கு

# தளபாட அன்பளிப்பு; பிரி-தூதுவர் இணக்கம்

கல்முனைப் பாடசாலைகளுக்கு தளபாட உதவி செய்ய பிரிட்டிஷ் தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான கதிரை, மேசைகளை அன்பளிப்பாக வழங்க தூதுவர் ஜேம்ஸ் பீஸ் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

● இலங்கை இனப்பிரச்சினை:

# புரிந்து கொள்ளும் பக்குவம் ராஜீவுக்கு இருக்கவில்லை!

"முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு இலங்கை இனப் பிரச்சினையைப் புரிந்துகொள்ளும் பக்குவம் இருக்கவில்லை' என்று விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பாரிஸிலிருந்து வெளிவரும் தமிழ்நாடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாக கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

## உ, அ. அ. பிரிவுகளில் கல்வி அமைப்பு

கோட்டங்களில் இயங்கும் பாடசாலைகளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாயிலாக வரைப்படுத்தி அக்கல்வி வலயத்தினுள் வரும் உள்ளூராட்சி சபைகள், அவைகளுள் இயங்கும் பாடசாலை வகைகள் எனப் பாகுபடுத்தி அனுப்புமாறு வட, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளது.

★ தபால் சேவையில்

# அரசு, தனியார் போட்டி ஏற்பட வாய்ப்பு - பிரதமர்

தபால் சேவையில் அரசு - தனியார் போட்டி ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது:

'தபால் சேவையில் அரசு - தனியார் போட்டி எதிர்காலத்தில் ஏற்பட இடமுண்டு' என்று சிறந்த ஊழியருக்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் பிரதமர் டி.பி. விஜயதுங்க தெரிவித்தார்.

# சாமிமலையில் கிரனைட் வீச்சு ஒன்பது பேர் காயமுற்றனர்

மஸ்கெலியாவிலிருந்து ஒன்பது கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சாமிமலை நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கிரனைட் வீச்சுச் சம்பவம் ஒன்று நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் ஒன்பது பேர் காயங்களுக்கு உள்ளாகி மஸ்கெலியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொள்ளை முயற்சியாகவே இக் கிரனைட் வீச்சு இடம்பெற்றிருக்கலாம் என்றும் ஜே.வி.பி இயக்கத்தைச் சேர்ந்தவர்களே தப்பியோடிய சந்தேக நபர்கள் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

★ ஜனாதிபதி கூறுகிறார்

# வடக்கு - கிழக்கில் நிகழ்வது அநியாயமான யுத்தம்

''இன்று வடக்கு, கிழக்கில் நிகழ்வது அநியாயமான யுத்தம்'' என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ கூறியுள்ளார்.

''இந்த அநியாயமான வடக்கு - கிழக்கு யுத்தம் இல்லையென்றால் ஆசிரியர்களுக்கு இதைவிட சிறந்த வசதிகளை வழங்க முடியும்'' என்று அவர் நேற்று முன்தினம் கம்பளை சாஹிரா கல்லூரி பொன் விழாவில் பேசுகையில் கூறினார்.

# தோட்ட நிர்வாகத்தில் இந்திய நிபுணர்கள்

தேயிலைத் தோட்டமொன்றில் நிழல் மரங்களை நாட்டவேண்டுமென இந்திய நிபுணர்கள் வழங்கிய ஆலோசனை உள்நாட்டு தோட்ட அதிகாரிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் சர்ச்சையையும் கிளப்பியுள்ளது.

இந்த நடவடிக்கை குறுகிய நன்மை மட்டுமே தரும் எனவும் மண்வளத்தை மிகவும் பாதிக்கும் எனவும் கூறப்படுகிறது.

இதே நேரம் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தில் அனுபவமில்லாத முகாமைத்துவ கம்பனிகள் இந்தியாவிற்கு தமது அலுவலர்களை அனுப்பி பயிற்சியளிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிகிறது.

# இலங்கை கடனாளியாக இருக்கும் நிலை மாறவேண்டும்

**- ஜனாதிபதி**

'இலங்கை உலகிடம் எப்போதும் கடன்பட்டுக் கொண்டிருக்க முடியாது'' என்று ஜனாதிபதி ஆர் பிரேமதாஸ கூறியுள்ளார்.

''கடனாளிகள் என்ற நிலையிலிருந்து எம்மை நாம் மீட்டெடுக்க வேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

# ஒழுக்கீனமாக ஆடல், பாடல் வாலிபர்களுக்கு ரூ.2500 அபராதம்

ஆபாசமாக ஆடிப்பாடிய 18 இளைஞர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து விடுமுறையைக் கழிக்க நுவரெலியாவிலுள்ள உல்லாச விடுதி ஒன்றிற்குச் சென்ற இந்த இளைஞர்கள் ஆபாசமாக பாடி ஒழுக்கீனமாக நடந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தலா 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# சுமுக நிலையின்மையால் கல்குடாவில் விவசாயம் பாதிப்பு

கல்குடாவில் நிலவும் அமைதியற்ற நிலைபோல விவசாயம் செய்ய முடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருபத்தாயிரம் ஏக்கரில் அடுத்தபோக விவசாயம் செய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அமைதியற்ற நிலை இதற்குத் தடையாக உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

★ இஸ்ரேலிய புதிய பிரதமர் ஆவல்

# மேற்காசியாவில் மீண்டும் அமைதி தோன்ற வேண்டும்

ஜோர்தான், சிரியா மற்றும் லெபனான் தலைநகருக்குச் செல்லத் தயார் என்று இஸ்ரேலின் புதிய பிரதமர் ஜிற்சார்க் ராபின் கூறியுள்ளார்

மேற்காசியப் பிரச்சினை குறித்து விவாதிக்க ஜெருசலம் வருமாறு இந் நாடுகளின் தலைவர்களை அழைத்துள்ளார்

மீண்டும் அமைதி ஏற்பட உதவிடுமாறு அவர் அரபு மக்களையும், பாலஸ்தீனியர்களையும் கேட்டுக் கொண்டார்

தொழிலாளர் கட்சித் தலைவரான அவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தனது புதிய அமைச்சர்களை அறிமுகப்படுத்தி பேசினார்.

ஜெருஸலத்தில் சாதாரண முறையில் தன்னைச் சந்திக்குமாறு ஜோர்தான் பாலஸ்தீனியக் குழுக்களை அவர் அழைத்தார்.

67 க்கு 53 என்ற வாக்குக் கணக்கில் இஸ்ரேலியப் பாராளுமன்றம் ரபீனின் அரசுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

இதற்கிடையே ராபினின் முன் முயற்சியை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் வரவேற்றுள்ளார்.

ராபினின் அழைப்பை முக்கியத்துவம் மிக்கதாகக் கருதுவதாகப் பாலஸ்தீனியத் தரப்புக் கூறியுள்ளது.

## 19 இல் நிகழும்

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த கலையரசு நூற்றாண்டு நாடகப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் மறு நாள் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நெடுஞ்செழியன் இன்னமும் அமெரிக்காவில்

தமிழக நிதியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் தொடர்ந்து அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவர் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பிலும் கலந்துகொள்ள இயலவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு - டாக்கா விமானசேவை உடன்படிக்கை

இலங்கைக்கும் டாக்காவுக்கும் இடையே நேரடி விமான சேவையை நடத்துவதற்கான உடன்படிக்கை ஒன்றில் இலங்கையும் பங்களாதேஷும் கைச்சாத்திட்டுள்ளன.

பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட பாதுகாப்புத்துறை செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க இலங்கை சார்பில் கையெழுத்திட்டார்.

## வெள்ளியுடன் நிறைவு

கொழும்புத்துறை மேற்கு, பழனியாண்டவர் ஆலய தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெறுகிறது

அன்றைய தினம் காலை சங்காபிஷேகமும், மாலை சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (47)

## மடை விழா

மேலை வண்ணை நாரிசுகேச விநாயகர் வைரவர் மடைவிழா இன்று மாலை 3.00 மணிக்கு வைரவர் பெருமானுக்கு விசேட பொங்கலுடன் அபிஷேகமும் நடைபெறும்

# கலை, இலக்கிய விளையாட்டு போட்டிகளுக்கு ஏற்பாடு

1992 ஆம் ஆண்டிற்கான கலை, இலக்கியம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தவிருக்கின்றது.

இப்போட்டியில் பங்கு பற்றுவோர் ஒரு சனசமூக நிலையத்தின் உறுப்பினராக இருப்பது அவசியம் என்றும் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 28 ஆம் திகதி என்றும் தெரிவிக்கப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு யாழ் மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 47

# முஸ்லிம் காங்கிரசுக்கு தமிழ் கட்சிகளின் 7 அம்சத்திட்டம்

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஈழத் தமிழ்க் குழுக்கள் ஒர் ஏழு அம்சத் திட்ட ஆலோசனையை முஸ்லிம் காங்கிரஸிடம் முன்வைத்துள்ளன.

கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய அம்பாறை முஸ்லிம் தன்னாதிக்க சபையின் அடிப்படையாக இருக்க வேண்டும் என்பது அவற்றில் முக்கியமானதென தெரியவருகின்றது.

மேலும் பின்வரும் 6 அம்சங்களும் இவ்வாலோசனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன

தன்னாதிக்கசபைக்கு பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்கள் முஸ்லிம் தன்னாதிக்க சபை பிரதேசத்திற்கு மட்டுப்படுத்தப்படும் தன்னாதிக்கசபைப் பிரதேசத்திற்கு வெளியே வாழும் முஸ்லிம்களதும் தன்னாதிக்க சபை பிரதேசத்தில் வழும் தமிழர்களதும் பாதுகாப்புக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்படும்.

அதற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களுக்குட்பட்ட விடயங்களை அமுல் செய்வதற்கு வடக்கு-கிழக்கு மாகாணசபையின் தலையீடில்லாத முழு அதிகாரமும் இருக்கும்.

தமிழர்களது சனத்தொகைக்கு ஏற்ப தன்னாதிக்க சபையில் தமிழர்களும் இடம்பெறுவர்,

இனவாரியாக பிரதேச சபைகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்படும்.

வட-கிழக்கு மாகாண சபைக்கு அம்பாறையில் இருந்து தெரிவு செய்யப்படுவோர் முஸ்லிம் தன்னாதிக்க சபையின் உறுப்பினர்களாக இருப்பர்

அம்பாறை பகுதியில் உள்ள தமிழர்களுக்கு என பிரதேச சபைகள் இருக்கும்,

இவ்வாலோசனைகள் பற்றிய கலந்துரையாடலில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை

## மேஜர் முரளி ஞாபகார்த்த போட்டி ஆரம்பம்

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

முதல் நிகழ்ச்சியாக காலை 9 மணியளவில் யாழ் கோட்ட மட்டத்திலான பாடசாலை மாணவர்கள் ஊர்வலமாக வந்து நல்லூரில் உள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியை வந்தடைந்தனர்.

அங்கு மேஜர் முரளியின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டது

பின்னர் பாடசாலை மாணவர்கள் தாம் கொண்டு வந்த செய்தியினை வாசித்தார்கள்

இந்த அஞ்சலி நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர் 47

## உ. பி. அரசுக்கு எதிரான மனு நிராகரிப்பு

அயோத்தியில் சர்ச்சைக்குட்பட்ட பகுதியில் மேலும் கட்டுமானப் பணிகள் நடக்காது தடுக்க உத்தரப்பிரதேச அரசுக்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை அலகாபாத்தின் உயர் நீதிமன்றத்தின் லக்னோ கிளையின் சிறப்பு பெஞ்ச் நிராகரித்துவிட்டது.

அரசு தொடர்ந்து தோண்டும் பணியில் ஈடுபட்டால் மழைநீர் கசிந்து பாபர் மசூதி சேதமடையக்கூடுமென்று மனுதாரர் மொகமத் அசீத் தெரிவிக்கும் அச்சத்திற்கு காரணமில்லை எனத் தெரிவிக்கப்பட்டது

## மீண்டும் ஆரம்பம்

1983 இல் நிகழ்ந்த இனக் கலவரத்துக்குப் பின் இப்போது மட்டக்களப்பு - கதிர்காம இ.போ.ச பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## பிரான்ஸ் தேசிய தினம்

பிரான்ஸின் தேசிய தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது

இதனையொட்டி பிரான்ஸ் ஜனாதிபதி மித்திரோனுக்கு பல உலகத் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளனர்.

★ அமைச்சர் மல்லிமாராச்சி சொல்கிறார்

# வட - கிழக்கு இணைப்பு; தொண்டா வலியுறுத்துவதில் தவறில்லை

''தமிழ் சமூகத்துக்காகக் குரல் கொடுக்க தொண்டமானுக்கு உரிமையுண்டு. இணைப்பை அவர் வலியுறுத்துவதில் தவறில்லை'' என்று அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்துள்ளார்,

''அமைச்சர் தொண்டமான் ஒரு தமிழர். தான் சார்ந்த தமிழ் சமூகத்துக்காக அவர் குரலெழுப்புவதைத் தவறு என்று எவரும் கூற முடியாது.

''எனவே இதர தமிழ்க்கட்சிகளுடன் வடக்கு - கிழக்கு இணைப்புக்காக அவர் குரல் கொடுக்கலாம் நானும் அவரது ஸ்தானத்தில் இருந்தால் அப்படித்தான் செய்வேன்'' என்று உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி நேற்று முன்தினம் கூறினார்.

## மாவீரர்நாள் சுவரொட்டி ஓவியங்கள்

இவ்வாண்டு மாவீரர் நாளுக்குரிய சுவரொட்டி ஓவியங்களையும், சுவரொட்டி வாசகங்களையும் மாவீரர் பணிமனை இம்முறை மக்களிடம் பெற்றுப் பிரசுரிக்கவுள்ளது இதன்மூலம் பலதரப்பட்ட கருத்துக்களையும், எண்ணங்களையும் பரவலாகப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது

இவ் ஓவியங்களையும், கருத்துச் செறிவுள்ள வாசகங்களையும் இம்மாதம் இறுதிக்கு முன்னர் தமிழீழ மாவீரர் பணிமனை கொக்குவில் என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ நேரடியாகவோ ஒப்படைக்கும்படி மாவீரர் பணிமனை கேட்டுள்ளது சுவரொட்டி வாசகங்கள் நாலு வரிக்குட்பட்டதாகவும், சுவரொட்டிகள் மாவீரர் தற்கொடையையும், போராட்ட உணர்வைத் தூண்டக்கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## தேர்தல் ஆணையாளர் அறிக்கை தெரிவுக்குழு நியமிக்க பிரேரணை

1989 பெப்ரவரி பதினைந்தாம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா சமர்ப்பித்த அறிக்கையை பரிசீலிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு வொன்று நியமிக்கப்படவுள்ளது

இதற்கான பிரேரணையை சபை முதல்வரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிகிறது.

## பிறப்பு இறப்பு விண்ணப்பங்கள் இன்று முதல் ஏற்கப்படும்

பிறப்பு இறப்பு அத்தாட்சி பத்திரங்களுக்கு விண்ணப்பிப்போரிடம் இருந்து இன்றிலிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என மேலதிக பதிவாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க பிறப்பு அத்தாட்சி படிவ புத்தகங்களை மேலதிகமாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு யாழ் அரச அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது! 47

## இணைப்புக்கு லிபரல் கட்சி நிபந்தனையுடன் ஆதரவு

மாகாணத்திற்குள் முஸ்லிம் மற்றும் சிங்கள சிறுபான்மையினருக்கு தன்னாதிக்க நிர்வாக அலகுகள் ஏற்பட்டால் வடக்கு - கிழக்கு இணைப்பை ஆதரிக்கத் தயார் என தம்மைச் சந்தித்துப் பேசிய ஏழு தமிழ் குழுக்களிடம் லிபரல் கட்சி தெரிவித்துள்ளது

இது தொடர்பாக லிபரல் கட்சி வெளியிட்ட அறிக்கையொன்றில் எந்தவொரு புதிய அதிகாரப் பகிர்வும் புதிதாக உருவாக்கப்படும் சமஷ்டி அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அமுல் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் தற்போதைய ஒற்றையாட்சி அரசியலமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் வரித்துள்ள அதிகாரப் பரவலை அமுல் செய்தல் தோல்வியடைந்துள்ளது என்றும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹெல உறுமயவுக்கு சிறிமா எச்சரிக்கை

தமிழ்க் கட்சிகள் ஆலோசனைகளை நியாயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். கட்சியின் எந்தப் பிரிவினரும் சுதந்திரக்கட்சி எடுக்கும் முடிவுகள் தொடர்பாக அழுத்தம் பிரயோகிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கடந்த புதன்கிழமை நடைபெற்ற கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்

தமிழ்க் கட்சிகளின் நான்கு அம்சத்திட்டம் சுதந்திரக்கட்சியினால் பரிசீலிக்கப்படக்கூடாதென 'ஹெல உறுமய' குழுவினர் வாதிட்டபோதே திருமதி பண்டாரநாயக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்

இதற்கிடையில் கட்சி முடிவுகள் மீது அழுத்தம் பிரயோகிக்க முயலும் ஹெல உறுமய உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி தலைமைப்பீடம் பரிசீலித்து வருகிறது எனவும் தெரிகிறது

ஆனால் ஹெல உறுமயவினர் வடக்குத் தவிர்ந்த ஏனைய எட்டு மாகாணங்களிலும் இணைப்புக்கு எதிரான விளக்கங்களை வழங்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அனுமதியின்றி முடியாது

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுமதியின்றி இனிமேல் ஆசிரிய இடமாற்றங்களோ, நீடிப்புக்களோ செய்யக்கூடாது என யாழ் கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். 18

## தபால்களை சேர்க்கவும்

குமண கப்பலில் தபால்கள் செல்லவிருப்பதால் யாழ் பிரதம தபாலகத்திலுள்ள தபால் பெட்டியிலும் முன்பாக உள்ள தபால் பெட்டியிலும் இன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பாக வெளியூர்த் தபால்களைச் சேர்க்குமாறு தபாலதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியன்காடு, யாழ்ப்பாணம் லங்கா கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 15-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# 15 ஆயிரம் ரோச் பற்றறிகளை யாழ்ப்பாணம் கடத்த முயற்சி

யாழ்ப்பாணத்திற்கு பதினையாயிரம் ரோச் பற்றறிகளை கடத்த முயன்ற எரிபொருள் பௌசர் ஒன்றை நேற்று பொலிஸார் கொழும்பில் கைப்பற்றினர்.

கொழும்பு புளுமெண்டல் வீதியில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன விநியோக நிலையத்துக்கு இந்த பௌசர் வந்தபோது பொலிஸார் பற்றறிகள் பௌசரின் அடிப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டதைக் கண்டுபிடித்தனர்.

இந்த பௌசரின் சாரதியும் கிளீனரும் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விநியோக நிலைய முகாமையாளர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## பாப்பரசருக்கு சத்திரசிகிச்சை

வயிற்று நோய் காரணமாக ரோம் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ள பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இன்று காலை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவர் உடல் நிலையில் மோசமான நிலை ஏதும் இல்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பணவீக்கம் குறைகிறதாம்

1990 இல் இருபது வீதத்திற்கு மேலாகவிருந்த பணவீக்கத்தை 1992 ஜூன் மாத முடிவில் பதினொரு வீதத்திற்கு குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது

இவ்வாறு பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜேதுங்க பாராளுமன்றத்தில் பேசும்போது கூறினார்.

ஆனால் சுதந்திரக் கட்சியின் நிமால்சிறிபாலடி சில்வா இதை மறுத்து உண்மையில் வாழ்க்கைச்செலவு துரிதமாக அதிகரிக்கிறது எனக் கூறினார்.

## பனையில் இருந்து விழுந்து மரணம்

பனையில் ஏறிய தொழிலாளி ஒருவர் கால் தவறி நிலத்தில் விழுந்து மரணமான சம்பவம் இளவாலை புனித யூதா கோயிலடியில் இடம்பெற்றது

செபஸ்தியநாதர் என்பவரே இவ்வாறு மரணமானவராவார் 13

துாக்கா...

களை மீட்டு வருவது பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் அரசாங்க அதிபர் பேச்சு நடத்தவுள்ளார்.

தர்க்கையம்மன் ஆலய நட்டஈடு குறித்தும் அரச அதிபர் கொழும்பில் பேச்சு நடத்தவுள்ளார்.

அ. தி. மு. க....

"ராஜீவ் காந்தி கொலைப் பழிக்குக்காகிவிட்டாலும் அ. தி. மு. க. தனித்து நின்று வெற்றியடைந்திருக்கும் என முதலமைச்சர் ஜெயலலிதா மதுரை மாநாட்டில் உரையாற்றியமை தவறு எனக் கண்டனம் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தியின் கொலையினால் மக்களிடையே எழுந்த அனுதாபத்தினாலேயே அவரிகள் வாக்களித்தனர் என பாலசுப்பிரமணியன் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் வாழப்பாடி ராமமூர்த்தி ராஜீவ் கொலையினால் எழுந்த அனுதாபமே அ. தி. மு. கவின் வெற்றிக்கு காரணம் என கூறியிருந்ததையும் அதை முதலமைச்சர் ஜெயலலிதா வன்மையாக மறுத்து மதுரை மாநாட்டில் உரையாற்றியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ். அரசாங்க அதிபர் நேற்று கொழும்பு பயணம்

யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று பிற்பகல் 3 30 மணியளவில் குமண கப்பலில் திருகோணமலைக்கு பயணமானார்.

திருகோணமலையில் இருந்து வாகனம் மூலம் அவர் கொழும்பு செல்வார்

யாழ். மாவட்டத்தில் நிலவும் அத்தியாவசிய பிரச்சினைகள், மேலதிக உணவுக் கப்பலை சேவையில் அமர்த்துவது மற்றும் பல முக்கிய தேவைகள் குறித்து அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 47,07

## அராலிப்பகுதி விவசாயிகள் சிறுதானியச் செய்கை ஈடுபாடு

நீண்ட காலமாக பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு அதிக வருவாயைப் பெற்று வந்த அராலி மேற்குப் பகுதி விவசாயிகள் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு காரணமாகவும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாகவும் பம்பாய் வெங்காயச் செய்கையை கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கைவிட்டு தற்போது சிறுதானியச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்

இங்குள்ள விவசாயிகளில் பெரும் பாலானோர் குரக்கன், பயறு முதலான சிறுதானியச் செய்கையிலேயே ஈடுபட்டு வருகின்றனர். 18

## நியமனக்கடிதங்கள் விரைவில் கிடைக்கும் எனத் தெரிவிப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உப அதிபர் பிரதித்தலைவர் முதலான பதவிகளில் கடமை புரிவோருக்கு விரைவில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இதுவரை தமக்குக் கீழ் கடமைபுரியும் உப அதிபர் பிரதித்தலைவர்களுக்கு நியமனக்கடிதங்கள் பெற்றுக் கொடுக்காத அதிபர்கள் இவர்களது பெயர்களைச் சிபாரிசு செய்து பிரதிக் கல்விப்பணிப்பாளர் மூலம் தமக்கு அனுப்பிவைக்குமாறு வட மாநிலக் கல்விப்பணிப்பாளர் சகல அதிபர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (18)

## சிறுவர் ஓவியப் போட்டி ஐ. நா. சங்கம் அழைப்பு

1992 டிசம்பர் மாதம் ஜப்பானில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட 7 ஆவது சர்வதேச இரு வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சிறுவர் ஓவியங்கள் போட்டிக்கு ஓவியங்களைச் சமர்ப்பிக்கும்படி 4 முதல் 15 வயது வரையுள்ள பாடசாலை மாணவ மாணவிகளுக்கு ஸ்ரீலங்கா ஐக்கிய நாடுகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

உலக மக்களின் பல வகைப்பட்ட வாழ்க்கை முறை, கலாசாரம் என்பவற்றை புரிந்து கொள்ளக்கூடியதாக சிறுவர் சிறுமியர்களின் வடிவமைப்பு அமைவது இந்த போட்டியின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

இ போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் சகல சித்திரங்களும் 22×22 அங்குல அளவுடைய தாளிலேயே வரையப்பட வேண்டும் எனவும் 1992 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாக தமக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் ஸ்ரீலங்கா ஐக்கிய நாடுகள் சங்கச் செயலாளர் திரு. குமாரன் பர்னாந்து அறிவித்துள்ளார். 18

## தேசிய நூல் அபிவிருத்தி சபை பாடசாலை கட்டுரைப் போட்டி

கல்விச் சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபை பாடசாலை மாணவர்களுடைய எழுத்து ஆற்றலை வளர்க்கும் குறிக்கோளுடன் பாடசாலை மாணவர்களுடைய கட்டுரைகளுள் சிறந்த மூன்றினைத் தெரிவு செய்து பரிசு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது

2 ஆம் ஆண்டிலிருந்து 6 ஆம் ஆண்டுவரை ஒரு கட்டுரையும் 7 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆம் ஆண்டுவரை ஒரு கட்டுரையும் 11 ஆம் ஆண்டிலிருந்து 13 ஆம் ஆண்டுவரை ஒரு கட்டுரையும் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

இப்போட்டி சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்று சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுரைகளை பயன்படுத்தி பாடசாலை, கொத்தணி, கோட்ட, மாவட்ட அடிப்படையில் போட்டிகளை நடத்துமாறு கேட்கப்பட்டுள்ளது 18

## அ. அட்டை ஏற்பாடு

குறித்த வயதெல்லையை எட்டிய தகுதியுடைய மாணவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்க ஆட்பதிவுத் திணைக்களம் முன்வந்துள்ளது.

மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றினை சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஆட்பதிவுத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ளது. (18)